சார்பு நீதிமன்றம் ,பெருந்துறை, ஈரோடு மாவட்டம்

முன்னிலை : திரு. பா. சரவணன், பி.எஸ்.சி.பி.எல்.,

சார்பு நீதிபதி, பெருந்துறை.

| |
|---|
| அ வ எண்108/16 |
| வா.சா.1(பழனிசாமி) |
| நாள் 03.01.2019 |

1969ம் ஆண்டின் 54 வது சட்டப் பிரிவு 5(2) ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

6.10.1977 கிரய பத்திரத்தில் அசல் வழக்கு எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஈரோடு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் முத்து கவுண்டர், ராமசாமி கவுண்டர், பழனிசாமி கவுண்டர் ஆகியோர் மீது அவ எண் 31/1976 படி வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது என்றால் ஞாபகமில்லை. அந்த வழக்கில் நான் 3ம் பிரதிவாதியாக இருந்தேன் என்றால் அது எனக்கு தெரியாது. அவ எண் 31/1976 வழக்குரையை பிரதிவாதி தாக்கல் செய்வதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. அவ எண்31/1976 வழக்கிலேயே தாவா சொத்துக்கள் கந்தசாமி பிள்ளை, கல்யாண சுந்தரம் பிள்ளை, கிருஸ்ண்சாமி பிள்ளை ஆகியோருக்கு தாவா சொத்தின் தென்புறம் தான் பாத்தியப்பட்டிருந்தாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஏகமாக தான் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (இந்த கேள்வியை கேட்க வாதி தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது.) இந்த கேள்வியை கேட்க ஆட்சேபணை எழுப்ப முடியாது என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் தென்புற பகுதியை தான் நாங்கள் அனுபவித்து வருகிறோம் என்றம் வடபுற பகுதியில் எங்களுக்கு எந்த அனுபவமும் இல்லை என்றால் சரியல்ல. மொத்தம் 9 ஏக்கர் 73 சென்டின் தென்புறம் வண்டி தடம் உள்ளது. அதை ஒட்டியே மேபுறம் எங்களுக்கு பாத்தியப்பட்ட கட்டுத்தரை உள்ளது என்றால் சரியல்ல. கட்டுத்தரை உள்ளது என்று அதை நாங்கள் அனுபவித்து வருகிறோம் என்றும் வழக்கிற்காக அதை மறைத்த சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அந்த கட்டுத்தரைக்கு வடபுறம் ராமசாமி அனுபவிக்கும கட்டுத்தரை உள்ளது என்றால் சரியல்ல. அந்த பகுதியில் ஆறுமுகம் என்பவருக்கு பட்டா வழங்கியுள்ளது என்றும், அதில் அவர் வீடு கட்டியுள்ளார் என்றும் சொன்னால் சரிதான். அந்த வீட்டின் கிழபுறம் எங்களுக்கு பாத்தியப்பட்ட நிலம் உள்ளது என்றால் சரியல்ல. பொதுவாக தான் உள்ளது. மொத்தம் 9 ஏக்கர் 73 சென்டில் கிணறு ஒன்று உள்ளது. கிணற்றில் எங்களுக்கும்

பாகம் உள்ளது. அந்த கிணற்றில் எனக்கு மட்டும் 2/16 பாகம் உள்ளது. வழக்குரையில் அந்த கிணறை குறிப்பிடவில்லை. அதற்கு மின் இணைப்பு உள்ளது. மின் இணைப்பு யார் பெயரில் உள்ளது என்று தெரியாது. மேற்படி மின் இணைப்பு வடபுறம் உள்ள ராமசாமியின் பெயரில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. ராமசாமி கவுண்டர் வீட்டிற்கு கிழக்கே அந்த கிணறு உள்ளது. ராமசரி கவுண்டர் வகையறா அந்த இடத்தில் வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள். எனக்கு அந்த வீட்டில் பாகம் இல்லை. கிணறில் தான் பாகம் உள்ளது. கிணறு உள்ளதை வழக்குரையில் காட்டவில்லை என்றும் அதில் பங்கு இருப்பதாகவும குறிப்பிடவில்லை என்றால் தெரியாது. தாவா நிலத்தில் 4 ஏக்கர் 73 சென்ட் ஆயக்காட்டிற்கு சேர்ந்தது. 5 ஏக்கர் மானாவாரி நிலம். வா.சா.ஆ 10 பர்மிட்டில் கந்தசாமி பிள்ளை, கல்யாணசுந்தரம் பிள்ளை, கிருஸ்ணசாமி பிள்ளை, ராஜரத்தினம் பிள்ளை, பழனிகவுண்டர், அம்மாசை கவுண்டர் ஆகிய அனைவருக்கும் தான் பர்மிட் கொடுத்துள்ளார்கள். அந்த பர்மிட் 4 ஏக்கர் 73 சென்டிற்கு கொடுத்துள்ளார்கள். கொப்பு வாய்கால் 9 ஏக்கர் 73 சென்டிற்கு வடக்கே இருந்து தெற்கே நோக்கி வருகிறது. அதை தாண்டி செல்வதில்லை. வா.சா.ஆ 10 ரசீதில் பழனிகவுண்டர், அம்மாசை கவுண்டர் பெயர் தவறாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ராமசாமி கவுண்டருக்கு தங்கமுத்து என்ற மகன் இறந்து விட்டார். தங்முத்து தவிர அவருக்கு 7ம் பிரதிவாதி ஜெயலட்சுமியும் வாரிசு. ராமசாமி கவுண்டரும், சென்னிமலை கவுண்டரும் 1937 ம் வருடம் தாவா சொத்தில் வடபுறத்தில் 4 ஏக்கர் 86 1/2 சென்ட குறிப்பிட்ட நான்குஎல்லை கண்டு வாங்கினார்கள் என்றால் சரியல்ல. பொதுவாக தான் வாங்கினார்கள். அவ்வாறு அவர் வாங்கிய விவரத்தை எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் அது பற்றி தெரியாது. 1937 பத்திரத்தில் நான்கு எல்லை குறிப்பிட்டு 4 ஏக்கர் 86 1/2 செனட் வாங்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. எங்களுக்கு விற்ற ராமசாமி பிள்ளை வகையறா 7.12.1912 ல் தென்புற எல்லையை குறிப்பிட்டு தான் தாவா சொத்தில் தென்புறம் உள்ள பகுதியை தான் வாங்கியுள்ளார்கள் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. எங்களுக்கு விற்றவர்கள் அந்த பத்திரத்தில் பொதுவில் என்று விற்க உரிய அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. அந்த பத்திரத்தில் பொதுவில் என்று உள்ள வாசகம் எங்கள் அண்ணன், தம்பிக்குள் பொதுவில் என்ற அர்த்ததில் எழுதப்பட்டது என்றால சரியல்ல. என் சொத்திற்குரிய ரீ சர்வே எண் தெரியாது. சப் டிவிசன் ஆகியுள்ளது தெரியும். சப்டிவிசன் படி என்ன் எண் கொடுத்தார்கள் என்று தெரியாது. சப் டிவிசன் படி என் இடத்திற்குரீச எண்

*178 என்று குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. 6,7 பிரதிவாதிகள் நிலம் ரி.ச எண் 177 என்று வகைபாடு செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. 6,7 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட நிலத்திற்கு தண்ணீர் பாய்ச்சினீர்களா என்றால் அதிலும் எங்களுக்கு பங்கு உள்ளது, அனைவரும் பாய்ச்சுவோம். தண்ணீர் பாய்ச்ச கூலியாக வடபுறம் உள்ள 12 தென்னை மரங்களில் தேங்காய் பறித்து கொள்வேன் என்றால் சரியல்ல. வடபுறம் தென்னை மரம் உள்ளது. எல்லோருக்கும் உள்ளது. எனக்கு தென்னை மரத்தில் பாத்தியம் உள்ளது என்று வழக்குரையில் சொல்லவில்லை என்றால் தெரியாது.*

*(வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)*

Uploaded by

SS